# இலங்கைத் தமிழர் கொலையைக் கண்டித்து


விலை ரூபா 1-25

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 21 ஷவ்வா 26 இதழ் 144

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 5-7-1986


## அடையாள உண்ணுவிரதம்

புதுடில்லி, ஜூலை 4

இராணுவத்தினர் இலங்கைத் தமிழர்களை கொலை செய்வதை நிறுத்தவேண்டும் என்று கோரி புதுடில்லியில் இன்று அ. இ. அ. தி மு. சழகத்தின் நாடாளுமன்ற மக்களவைத் தலைவர் திரு. குழந்தைவேலு அடையாள உண்ணுவிரதம் ஒன்றை மேற்கொண்டார்.

இவ் உண்ணுவிரதத்தில் அ. இ. அ. தி. மு. க. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எம். ஆர். ஜனர்த்தனன், திரு. பி. சண்முகன் உட்பட புதுடில்லியிலுள்ள தமிழர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

இலங்கையில் தமிழர்கள் மீது அந்நாட்டரசு மேற்கொள்ளும் தாக்குதல்களை மத்திய அரசு தலையிட்டுஉடன் நிறுத்தவேண்டும் என்று அங்கு கோரிக்கை விடப்பட்டது.

கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்படும் பட்சத்தில் இதைத்தொடர்ந்து நடைபெறும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரின்போது காலவரையறையற்ற உண்ணுவிரதத்தை மேற்கொள்ளப்போவதாசவும் திரு. குழந்தைவேலு மேலும்தெரிவித்தார். (பி)

### சுவரொட்டிகள்

கொழும்பு, வெள்ளி

இஸ்ரேலிய அரசுக்கு எதிரான பல சுவரொட்டிகள் கொழும்பில் பல இடங்களில் மும்மொழிகளிலும் ஒட்டப்பட்டுள்ளது. (சிவ)

## நடுக்கடலில் நடந்த பயங்கரம்

# இலங்கை கடற்படையினரால்

# 9 இந்திய மீனவர் சுட்டுக்கொலை

## படகில் பொருள்களும் சூறை

(அலுவலக நிருபர்)

**இந்திய மீனவர்களின் இரு படகுகள நடுக்கடலில் வைத்து இலங்கைக் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு, அப்படகுகளிலிருந்த 9 பேர் சுட்டுக்கொல்லப்பட்டடார்கள்; இவர்களின் சடலங்கள் கடற்படையினரால் கடலில் தூக்கிவீசப்பட்டன. படகுகளிலிருந்த பொருள்களும் சூறையாடப்பட்டன:**

இச்சம்பவத்தின்போது படுகாயமடைந்து படகுகளுடன் நேற்றுக்காலை கரை ஒதுங்கி தப்பிய ஒருவர் யாழ், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இராமேஸ்வரம், இந்திரா நகர், வேர்கோட் கிராமத்தைச் சேர்ந்த வி. கணபதி (24 வயது) என்பவரே இப்பயங்கர சம்பவத்தின் போது துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் தப்பித்துக்கொண்டவராவார்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னர் இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிப்பதற்காகப் படகொன்றில் 5 மீனவர்கள் கச்சதீவுப் பக்கமாகச் சென்ருர்கள் இவர்கள் சென்றபடகின்பெயர் 'ஸ்ரீ ஆஞ்சநேயர்' ஆகும்.

இச்சம்பவம்பற்றி படுகாயமடைந்த கணபதி தெரிவித்ததாவது.

''பத்துநாட்களாகியும் மீன் பிடிக்கச்சென்ற படகு கரை சேராததால் கடந்த முதலாம் திகதி இரு படகுகளில் அப்படகைத் தேடிப்புறப்பட்டோம். நாங்கள் சென்ற இருபடகுகளுக்கும் 'ஸ்ரீ ராமஜெயம்' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு படகுகளிலும் ஐந்து பேர் வீதம் சென்றோம்.

இருபடகுகளும் நடுக்கடலை அடைந்ததும் பீரங்கிகள் பொருத்தப்பட்ட மூன்று படகுகள் எங்கள் படகுகளை நோக்கிவிரைந்து வந்தன.

'எங்கள் படகுகளை நிறுத்தும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அப்போது துப்

(5ம் பக்கம் பார்க்க)

## ஒரு மாதமாக கிளிநொச்சி தொடர்ந்து ஸ்தம்பிதம்

கிளிநொச்சி வெள்ளி

கிளிநொச்சி இராணுவத்தினர் மீதான தாக்குதலை விடுதலைப்புலிகள் ஆரம்பித்து இன்றுடன் ஒரு மாதம் முடிவடைந்துள்ளது. கடந்த மாதம் 4ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதலைத்தொடர்ந்து கிளிநொச்சிமக்கள் வீடுகளைக் கைவிட்ட நிலையில் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். இராணுவ நடவடிக்கைகளால் பொதுமக்கள்பலர் பலியாகியுள்ளனர். சுமார் 15ஆயிரம் மாணவரின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. இராணுவ தரப்பிலும் பலர் பலியாகியுள்ளனர்

இராணுவ நடவடிக்கைகளினால் இடமபெயர்ந்த மக்கள் சொந்த இடம்திரும்பும் சூழ்நிலை இன்னமும் உருவாகவில்லை.

(5ம் பக்கம் பார்க்க)

## நடவடிக்கை எடுக்குமாறு ராஜீவுக்குக் கோரிக்கை

சென்னை, வெள்ளி

இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளிமக்கள் சிங்களவரினுல் தாக்கப்படுவதையும் இந்தியக்கடற் பிரதேசத்தில்இந்திய மீனவர் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதையும் தடுக்க இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென உலக தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் டாக்டர் இரா. ஜனர்த்தனன் கடிதம் மூலம் கேடடுள்ளார்.

திரு ஜனர்த்தனன் தமது கடிதத்தில் கொலை, கொள்ளை, தீவைப்பு போன்ற மனிதாபிமானமற்ற நடவடிக்கை மூலம் தோட்டத்தொழிலாளர்

(5ம் பக்கம் பார்க்க)

## மாகாண சபையை எதிர்த்து லண்டனில் சிங்கள அமைப்புகள் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜூன் 4

இனப்பிரச்னை தீர்வுக்காக இலங்கை அரசு முனவைத்துள்ள மாகாண சபை மற்றும் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை உடன் கைவிட வேண்டும் என்று கோரி லண்டனிலுள்ள சிங்கள அமைப்புக்கள் யாவும் ஒன்றிணைந்து இலங்கைக்கான லண்டன் தூதரசம் முன் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை இன்று நடாத்திஞர்கள்.

அத்துடன் இத்திட்டம் இலங்கையில் செயல் படுத்தப்பட்டால் இலங்கையின் மூன்றில்

(5ம் பக்கம் பார்க்க)

## சாம்பல்தீவிலிருந்து மக்கள் வெளியேற்றம்

திருமலை, வெள்ளி

திருமலை மாவட்டத்திலுள்ள சாம்பல் தீவைச் சேர்ந்த சுமார் 50 குடும்பங்கள் அகதிகளாக முல்லைத்தீவுக்குச் சென்றுள்ளார்கள்.

சாம்பல்தீவில் புதிய இராணுவ முகாம் ஒன்று திறக்கப்பட்டபின்னரே அச்சம

(5ம் பக்கம் பார்க்க)


### புனித இயக்கங்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்

எமது ஜீவனத்திற்கு உறுதுணையாயிருந்த CG 125 84 ஸ்ரீ 5721 இலக்கமுடைய ஹொண்டா மோட்டார் சைக்கிள் விதவையான நான் பிள்ளைகளுடன் வீட்டில் இருக்கையில் 25-6-86 இரவு இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டு விட்டது. இதனை மீட்டுத்தந்துதவுமாறு புனித இயக்கங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி A. S. சரோஜினி

ஸ்ரேஷன் றேட்,
சுன்னுகம்.

C3300


## திருமலையில் புலிகளால் கைதான 20 ஊர்காவல் படையினர் நிபந்தனையின்பேரில் விடுதலை

யாழ்ப்பாணம் சனி

திருமலையில் நள்ளிரவில் கடமையிலீடுபட்டிருந்த 20 ஊர்காவறபடையினரை 'தமிழீழ விடுதலைப்புலிகள்' இயக்கப்போளிகள் சுற்றிவளைத்து கைதுசெய்ததாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட 20ஊர் காவற்படையினரும் தமிழ் பேசும் மூஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தமையால் அவர்களிடமிருந்த துப்பாக்கிகளைப் பறிமுதல்செய்து கொண்டு அவர்களை விடுவித்ததாகவும் தெரியவருகிறது.

நேற்றுமுன் தினம்இரவு இச் சம்பவம் இடம் பெற்றது

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

திருமலை மாவட்டத்தில் உள்ள வாஞறிலும், சுங்கான் குழியிலும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணியளவில் எமது வீரர்களால் சுற்றிவளைத்துதேடுதல் வேட்டை நடத்தியபோது 20 ஊர்காவல் படையினர் துப்பாக்கிகளுடன் சிக்கினர்கள். இவர்களை விசாரணை செய்தபின்னர் 20 துப்பாக்கிகளும் 60 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டது. இவர்கள் அனைவரும் பந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பட்டனர்'' [மா]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

HONDA C90 82 சிறி Recondition ரூ. 7500/-. சிங்கர் காலமெசின் ரூ. 1,250/-. சயிக்கிள் Gents ரூ. 1000/-. 3-6 மணிவரை ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. [C 3266]

எம்மிடம் N.V. 380 நஷனல் இன வீடியோ டெக் [புதியது] விற்பனைக்குண்டு. வாங்கவிரும்புவோர் நேரடியாகத் தொடர்புகொள்ளவும்: பண்டிதர் S.K. சிறீகாந்தலிங்கம் 22, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம். [C3260]

வீட்டுத்களபாடங்கள், அல்மாரி, Nursery தளபாடங்கள், Akai Stereo றேடியோ, Baby cot, Formica சாப்பாட்டு மேசை, Verandah Chairs, Book Shelf, எழுதுமேசை, சியெஸ்டா மெத்தைகள், Water Filter, கிளாஸ்வகைகள் மற்றும் பல உடன்விற்பனைக்குண்டு. 326, பிரதான வீதி யாழ்ப்பாணம். [மாவடிச் சந்தி] [C3262]

புத்தம் புதிய சிசில் குளிர்சாதப்பெட்டி விற்பனைக்குண்டு தொடர்பு: சிற்றி ஷொப், 18/2 விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [C 3254)

3 மாதம் வயதுடைய 2 அல்சேஷன் சுத்த இனக்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: வோ. ரட்ணம். 22, சோமசுந்தரம் அவெனியு. சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [C 3215

ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற் — ஏராளமான கசெற்றுக்கள், ஏராளமான தெரிவுகள் ஒலிப்பதிவு செய்யப்பட்ட கசெற் விபரக்கொத்து பார்த்து தெரிவு செய்யலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [C-3271]

பற்றிக் [Batick] துணிவகைகள் ஓடருக்கு செய்துகொடுக்கப்படும். விரும்பிய டிசைன்களில் பற்றிக் [Batick] ஆடைகள் பெற்றுக்கொள்வதற்கு வசந்தா ரெக்ஸ்ரையில்ஸ், [Vasantha Textiles] 42, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம், [C 3130]

நாவற்குழி றெயில்வே ஸ்ரேசனிலிருந்து 300 யாருக்கு அப்பால் உள்ள கேரதீவு றோட்டில் 32 பரப்பு தனியாருக்குரிய காணியும், (2) வீடும் சகல வசதிகளுடன் கூடிய 6 பரப்புக் காணி உடுவில் கந்தரோடை றோட்டிலும், (3) கிளிநொச்சி 5-ம் வாய்க்காலில் நெற்காணி 12 ஏக்கரும் விற்பனைக்குண்டு. விளம்பர இல: C 3236, C/ஈழநாடு, யாழ்ப்பாணம். [C3236]

கோண்டாவிலில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க: S கனகலிங்கம், நெட்டிலிப்பாய், கோண்டாவில். (C3235)

விருத்துக்கான, இறைச்சிக்கான கோழிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. 'றெக்' என்ஜினியர்ஸ், பருத்தித்துறை வீதி, கோப்பாய். [C 3269]

டீசல் என்ஜின் பொருத்தப்பட்ட [Austin A 90] கேம்பிரிஜ் கார் நல்ல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: V. சபாரெத்தினம், 9/6, புதிய வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [C 3258)

## வகுப்புகள்

SPECIAL ENGLISH-விசேட ஆங்கில வகுப்பு உயர் கல்வி மாணவர்கட்குரியது. மொழியின் சகல அம்சங்களும் கொண்ட கற்கைநெறி ஆறு மத துரித, விரிவான போதனை வாரம் மூன்று வகுப்புகள். புதன், சனி, ஞாயிறு பி. ப 3-30 — 5-30. ஆசிரியர்: த. ந பஞ்சாட்சரம், இடம்: Ganas Academy, Nallur. தினம் பி. ப 3-30 மணிக்கு கல்வி நிலையத்தில் தொடர்புகொள்க:- நிர்வாகி. [C-3256]

Quantity Surveying [காலம்: 3 மாதம்] வகுப்பு ஆரம்பம்: 7-7-86 1-30 p.m. விபரங்கட்கு: JAFFNA TECHNICAL INSTITUTE. 52/1, Stanley Road, Jaffna [C3239)

Electronic Engineering (B. Sc - 1st year Level English Medium விண்ணப்ப முடிவுத் திகதி: 05 07 86 தொடர்பு: Vispa Engineering Aid Hall, [ஆனைப்பந்திச் சந்திக் கருகாமையில்], 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [C-3109]

Radio and T. V. (Antenna Deck) வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம். English Typing புதிய பிரிவுகள் 05-07-86 இல் ஆரம்பமாகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். வெளிநாடு செல்பவர்களுக்கு விரைவில் Courses முடிக்கப்படும். Vispa Engineering Aid Hall, 328 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C 3200)

அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் A/L வகுப்புவரை ஆங்கிலம், Spoken English 10-7-86 ல் தொடங்கப்படும். விரும்பியோர் நேரடியாகவோ எழுத்துமூலமாகவோ விண்ணப்பிக்கலாம். அத்துடன் ஆங்கில தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் கற்பிக்கப்படும். தொடர்பு: இ. நவரத்தினம், (இளைப்பாறிய வங்கி உதவி முகாமையாளர்) 27/4, வைமன் றோட், யாழ்ப்பாணம். [C 3263]

## வாடகைக்கு

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கருகாமையில் காங்கேசன்துறை வீதியில் ஒருகடையும் வீடும் வாடகைக்குண்டு. உடன் தொடர்புகொள்ளவும் [விலையாகவும் பெற்றுக்கொள்ளலாம்] கு வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம். [C 3257]

மானிப்பாய் தபாற்கந்தோருக்கு அருகாமையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நேரில் வரவும்: தமயந்தி அச்சகம், மானிப்பாய். [C 3252]

## தேவை

யாழ். மாநகர எல்லைக்குள் ஒரு சிறு குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: 32, பிரப்பங்குளம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (C 3280]

## சேவை

மின் விசிறி, மின் அடுப்பு, ரான்ஸ்போமர், மோட்டர் கிறைண்டர், வாசிங்மெஷின், ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன உத்தரவாதத்துடன் திருத்த, றீவைண்டிங் செய்ய ஒமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம், (பழுதடைந்த மேற்குறிப்பிட்ட உபகரணங்கள் விலைக்கும் வாங்கப்படும்) (C- 3217)

ஆங்கில தட்டெழுத்து வேலைகள் பொறுப்பேற்கப் படும். தொடர்பு: இ. நவரத்தினம், (இளைப்பாறிய வங்கி உதவி முகாமையாளர்] 27/4, வைமன் றோட், யாழ்ப்பாணம். [C3264]

### கரைதுறைப் பற்று ப. நோ, கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

### III-ம் தர பொது முகாமையாளர்

மேற்குறிப்பிட்ட விடயம்சம்பந்தமாக இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வயது:**
25-50 க்கும் இடைப்பட்டவராக இருக்கவேண்டும்.

**வேதனம்:**
600 4/10- 1000 [இத்துடன் ஊழியருக்கான படிகளும் வழங்கப்படும்]

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி; 18-07-1986. தேவையான தராதரங்கள் மற்றும் தகைமைகள் பற்றிய விபரங்களை கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இலக்கம் 108/81 [125. 11 81] ஐ அண்மையிலுள்ள ப.நோ. கூ. சங்கத்தில் பார்வையிட்டு அறிந்து கொள்ளலாம் விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் "தலைவர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ, சங்கம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
கரைதுறைப்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

1986-07-04. [A-906]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### திரு. ப. முருகேசு

(பாஞ - மூஞ)

திதி: 05 - 07 - 1986

நெடுந்தீவூரவர் நெஞ்சத்தில் இனிக்கும் அபிமானியே!

நீதி - நேர்மை - தேசப்பற்று ஆதியாம் துறைகளில், குரல் கொடுத்து வந்த உன் சங்க நாதம் காற்றோடு கலந்து விட்டது; உனது வீரதீரச் செயல்களின் சுவடுகள் காட்டாந்தரைப் புழுதியாயிற்று உனது அருமை பெருமை யாவும் - எமது கண்ணீரை-உணவுடன் குழைத்து விட்டது. ஆயினும் உனது நல்வார்த்தைகளும், பேருதவிகளும் இன்னும் பேசிக்கொண்டிருக்கின்றன. நீ-வானவர் உலகில் நல்விருந்தாக வாழ வேண்டுகிறோம்.

இணைபிரியாத,
சின்னப்புநாயகம்,
குடும்பத்தினர்,
அன்பர்கள்.

(C 3283)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### D சேனாதிராஜா குரூஸ்

M.H.D.I. கும்பகோணம்
L C. O இலங்கை
[பல் கட்டுபவர் கண் பரிசோதகர்]

மலர்வு: 13-06-19 7

உதிர்வு; 05-07-1982

எம்மைச் சடுதியாய் ஆறுத்துயரில் ஆழ்த்தி மறைந்தாலும் இருள் சூழ்நத இக்காலங்களிலும் எம்மை மறவாது தெய்வமாய் நின்று எங்களைக் காத்த எம் குல விளக்கே எப்படி மறப்போம் உம் துணையை

உங்கள் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனன்மார்,
மைத்துனிமார் மற்றும்
உறவினர்கள்.

இல. 9, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

(C 3270)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு. பொன்னம்பலம் பத்மநாதன்

[பொலிஸ் சார்ஜன்ட் மேஜர், காங்கேசன்துறை]

மலர்வு: 04 - 09 - 1948
உதிர்வு: 27 - 06 - 1984
திதி: 05 - 07 - 1986

உற்றூர்கலங்க, ஊரார் புலம்ப, பெற்றோர் கதறியழ, சகோதரர் பதைபதைக்க, மனைவி பிள்ளைகள் புலம்பியழ எங்களை விட்டுப் பிரிந்து ஆண்டுகளிரண்டு ஓடிமறைந்தாலும் உங்களது மலர்வதனமும், புன்சிரிப்பும் எங்கள் மனதை விட்டு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்றோம்.

உங்கள் பிரிவாற் துயருறும்:

அன்பு மனைவி,
மக்கள், தாய்,
தந்தை, சகோதரர்,
மாமன், மாமி,
மைத்துனிகள்,
மைத்துனர்.

பத்ம இல்லம்,
இறங்கணிய வளவு,
காங்கேசன்துறை.

[C 3070]

## மின் தடை

### இலங்கை மின்சார சபையின்

## முக்கியஅறிவித்தல்

1986-07-06ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணத்தற்கு வரும் 33 K. V. மின் பாதையில் அவசர திருத்த வேலைகள் செய்ய இருப்பதனால் காலை 8.00 மணி முதல் மாலை 4 00 மணி வரை யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்திருக்கும் பெரும்பாலான உபமின் நிலையங்களுக்கும்; கோண்டாவில்; கொக்குவில்; கோப்பாய்; திருநெல்வேலி ஆகிய பகுதிகளுக்கும் மின் விநியோகத்தடை ஏற்படுமென சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இம் மின்தடையால் ஏற்படும் சகல மின் நுகர்வோரிடமிருந்தும் அவர்களுக்கு ஏற்படும் வசதியீனங்களுக்காக இலங்கை மின்சாரசபை தனது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இப்படிக்கு
மின் பொறியியலாளர்,

யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

[A 904]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### திரு கதிர்காமத்தம்பி நல்லலிங்கம்

(ஓய்வுபெற்ற மலாயன் பென்ஷனரும் P. W. D. ஓவசியரும்)

தோற்றம்: 15-03-1906
மறைவு: 05-06 1986

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் பாசத்தின் சிகரமாய் பிள்ளைகளுக்கு நல்ல வாழ்வினை அளிக்க அனுதினமும் ஆண்டவனை அன்புடன் வேண்டி நின்று எம்மையெல்லாம் ஆளாக்கிப் பேராக்கிய எமது, அன்புத் தெய்வமே! எம்மைத் துடிதுடிக்க வைத்து நொடிப் பொழுதில் எம்மைவிட்டுப் பிரிந்து நீங்கள் சென்றாலும் எங்கள் உயிரிலும் உடலிலும் கலந்துவிட்ட நீங்கள் என்றும் எம்களுடனேயே வாழுகிறீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரிவால் வாடும்
அன்பு மனைவி,
பிள்ளைகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவலிங்க நிலையம்,
வி. மு. தெரு,
பருத்தித்துறை.

(C 3272)

உலகச் செய்திகள்

# தென். ஆபிரிக்காவில் தொழிற்சங்கத் தலைவர்களை விடுவிக்க ஐ. எல். ஓ. கோரிக்கை

கேப்டவுண், ஜூலை-4

தென்னாபிரிக்காவில் நெருக்கடி நிலையின்கீழ் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தொழிற்சங்கத் தலைவர்களை விடுவிக்குமாறு சர்வதேச தொழிலாளர் நல அமைப்பு தென்னாபிரிக்க அரசைக் கேட்டுள்ளது.

ஐ எல் ஓ.வின் இயக்குநர் திரு. பிரான்ஸிஸ் பிலாங்கா தெ ஆபிரிக்கஅதிபருக்கு எழுதியுள்ள கடிதமொன்றில், நெருக்கடி நிலையின் அபாயகரமான விளைவுகள் குறித்துத் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளார். [து]

## கன்னட மொழி கட்டாய பாடம்:

# எதிர்ப்பு தெரிவித்து நடந்த சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டது

பெங்களூர், ஜூலை 4

கர்னாடகத்தின் எல்லையோர மாவட்டங்களிலுள்ள மராத்திய மாணவர்களுக்குக் கன்னட மொழியைக் கட்டாய பாடமாக்குவதை எதிர்த்து ஒரு மாத காலமாகத் தாம் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தைச் சாம்யுக்த மகாராஷ்டிர சீமா சமித்தி நிறுத்தியுள்ளது

பம்பாயில் நடைபெற்ற சமித்தியின் செயற்குழுக் கூட்டத்திற்குப் பின் சமித்தியின் தலைவர் திரு ஜோங்ஸி செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

பிரச்னைக்குரிய எல்லைப்பகுதியின் இரு மொழிப் பிரிவினர்க்கும் பொதுவான ஒரே மாதிரியானசீரானமொழிக்கொள்கை பின்பற்றபடுமென்று கர்னாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே ஒப்புக்கொண்டதாகக் கூறினார்.

மகாராஷ்டிரப் பகுதியில் உள்ள மராட்டிமொழி பேசாத மாணவர்களுக்கு மராத்தி மொழியைக் கட்டாய பாடமாக்கும் எந்த அம்சத்தையும் நீக்கிவிட மகாராஷ்டிர முதலமைச்சர் திரு. எஸ் பி. சவான் ஒப்புக்கொண்டதாகவும் அவர் கூறினார். [து]

## நட்புறவுச் சங்கம் 'அமிரை' சந்தித்தது

சென்னை வெள்ளி

இலங்கையிலிருந்து சென்னை வந்துள்ள நட்புறவுச் சங்கத்தினர் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம்திரு. அ அமிர்தலிங்கத்தைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்தும், இனப்பிரச்னைக்கு அமைதியான தீர்வு ஏற்படுவது குறித்தும் கலந்துரையாடியதாகத் தெரியவருகிறது. [து]

# "பாடசாலை வளர்ச்சியில் பெற்றோர் பங்கு அவசியம்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"பாடசாலை வளர்ச்சியில் பெற்றோர் பங்கு இன்றியமையாத தொன்றாகும்" என்று நல்லூர் இ. த பெண்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்கக் கூட்டத்திற்குத்தலைமை வகித்துப்பேசிய அதிபர் திருமதி இ. ஜெகானந்தகுரு கூறினார்

கடந்த ஆண்டு இச் சங்க நிர்வாக சபைக்கும் பாடசாலையின் வளர்ச்சியில் தமக்கு வழங்கிய ஒத்துழைப்பையும் அதிபர் பாராட்டினார். பெற்றோரால் பல ஆக்க பூர்வமான பிரேரணைகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன, நடப்பாண்டுக்கான நிர்வாக சபை அங்கத்தவர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திருமதி இ. ஜெகானந்தகுரு, திரு எ. துரைராஜசிங்கம் காரியதரிசி திரு பி. சிதம்பரநாதன், உபகாரியதரிசி திருமதி கே. இராசரத்தினம், பொருளாளர் திரு. கே. தவராசா, கணக்குப்பரிசோதகர்திரு எம். சிவபாலன்

நிர்வாக சபை அங்கத்தவர்கள் 10 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

## மிசோரமில்

# சமாதானத்தை ஏற்படுத்துவதே உடன்பாட்டின் நோக்கம்

-இந்திய உள்துறை மந்திரி

புதுடில்லி, ஜூலை-4

பாரத அரசியல் சாசனத்தின் வரம்பிற்குள் மிசோ சமாதான உடன்பாடுஅமைந்திருக்கிறதென்று இந்திய உள்துறை மந்திரி கூறியுள்ளார்.

அரசியல் சாசனத்திற்கு அப்பாற்பட்டவகையில் சிறப்பு அந்தஸ்து எதுவும் மிசோரத்திற்கு வழங்கப்படவில்லையென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மிசோராமில் சமாதானத்தை ஏற்படுத்துவதும், தலைமறைவுக் கிளர்ச்சிக்காரரைப் பொதுவாழ்வில் ஈடுபடுத்துவதும் தான் இந்த மிசோராம் உடன்பாட்டின் நோக்கம். தேசிய நலனைக் கருதி சட்டப்படியாக இந்த உடன்பாடு ஏற்பட்டிருக்கிறதென்றும் உள்துறை மந்திரி தெரிவித்துள்ளார். [து]

# இந்தியப் பிரதமர் ராஜீவ் மொரீஸியஸ் பயணம்

புதுடில்லி, ஜூலை, 4

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு மொரீஸியஸுக்குப் பயணமாகியுள்ளார்

திரு ராஜீவ், மொரீஸியஸில் தங்கியிருக்கும்போது அங்குள்ள தலைவர்களுடன் தென்னாபிரிக்கா மற்றும் இந்து மாகடலில் காணப்படும் அண்மைய முன்னேற்றங்கள் பற்றியும், விரைவில் நடைபெறவிருக்கும் கொமன்வெல்த் உச்சிமாநாடுபற்றியும் கலந்துரையாடுவார்

திரு. ராஜீவ் காந்தி மொரீஸியஸின் தேசிய அசெம்பிளியில் இன்று உரையாற்றுவார். [து]

## மீண்டும் போலந்தின் தலைவர்

வார்சோ, ஜூலை 4

போலந்து நாட்டின் ஆளும் ஒன்றுபட்ட தொழிலாளர் கட்சியின் தலைவராக ஜெனரல் ஜாருஷல்ஸ்கி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

புதிதாக அமைக்கப்பட்ட கட்சியின் மத்திய கமிட்டியின் முதலாவது மாநாட்டின் நிறைவு நாளில் வார்சோவில் நடைபெற்றதேர்தலிலே இவர் தலைவராகத் தெரிவானார்.

## ஒலி, ஒளி ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

"உள்ளூர் தொலைக்காட்சிச் சேவையினை நெறிப்படுத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட எமது கட்டமைப்புக்குள் இதுவரை அங்கத்துவம் பெறாத அனைத்து சேவைகளும் தடை செய்யப்பட்டுள்ளன என்பதை சேவையாளர்களுக்கும், மக்களுக்கும், அறியத்தருகின்றோம்' என்று யாழ்ப்பாணம் ஒலி, ஒளி ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்: "இவ்வறிவித்தலை ஏற்காது கட்டுப்பாட்டினை மீறி நடக்கும் சேவையாளர்களின் சேவை உபகரணங்கள் பறிமுதல் செய்வதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது, என்பதையும் அறியத் தருகின்றோம்" என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "இரத்ததானம் அவசியம்"

கொழும்புத்துறை சனி

"எங்கள் உடன் பிறவாச் சகோதரர்கள் குண்டுத்தாக்குதலிலும், விடுதலைப்போராட்டத்திலும் தாக்குண்டு இரத்த வங்கியில் இரத்தம் இன்றி உயிரிழக்கும் நிலை ஏற்படாது தடுக்கச் சகலரும் இரத்த தானம் செய்யத்தயாராக முன்வர வேண்டு'மென்று கொழும்புத்துறை 6ம், 7ம, 8ம் வட்டார மக்கள் அவையின் சுகாதாரக் குழுச் செயலாளர் திரு. சி. பேரானந்தம் விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

இச் சுகாதாரக்குழு இரத்த வங்கிக்கு இரத்ததானம் பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாகச்செய்து வருவதாகவும் இக்குழுவினால் இலவச வைத்திய சிகிச்சை நிலையமொன்றும் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## வருடாந்த பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கத்தின் 23வது ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை யாழ். பரி. யோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரசாங்க அதிபர் திரு கே. இராமநாதர், தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம், பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. த. குலசேகரம் ஆகியோர் கலந்துகொள்வார்கள். [ஐ]

## நல்லூர் பெண்கள் பாடசாலை பொருட்காட்சி

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர் இந்துதமிழ்ப் பெண்கள் பாடசாலைக் கல்விப் பொருட் கண் காட்சி கடந்த வாரம் நடைபெற்றது. ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஆறுவரை, பாட அலகு ரீதியாகவும், ஆண்டு 7 தொடக்கம் ஆண்டு 11 வரை பாடசாலைரீதியாகவும் இரு பிரிவாகக் காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

தமிழ், சமயம், விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி. ஆங்கிலம், சுகாதாரம், மனையியல், சங்கீதம், விவசாயம் ஆகிய துறைகளுக்கேற்ப காட்சிப் பொருட்கள் விரிவாக அமைக்கப்பட்டிருந்தன.

நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரியினால் திறந்து வைக்கப்பட்ட இப் பொருட்காட்சியைப் பார்வையிட்ட கல்வி அதிகாரிகள், திரு கந்தசாமி, திரு. சி சுப்பிரமணியம், திரு மகேசன், திரு. தேவதவபாலன் ஆகியோர் இக்காட்சியையிட்டுத் தமது பாராட்டுகளைப் பாடசாலை அதிபர்திருமதி இ ஜெகானந்த குருவுக்குத்தெரிவித்தனர்.

ஏராளமான பெற்றோரும் பழைய மாணவர்களும், நலன் விரும்பிகளும் இப்பொருட்காட்சியைப் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் முதல் முதலாக

தேசிக்காய் வாசனையுடன்




எம்டீ சோப்




115g ரூபா 2/-




650g ரூபா 12/00

இதே விலையில் இதைவிட சிக்கனமானதும் சிறந்ததுமான வேறொரு சவர்க்காரம் வாங்க முடியுமா...... இன்றே வாங்குங்கள்

புதிய எம்டீ சோப்

எம்டீ என்ரபிறைஸ்,
14, 16, கைத்தொழிற்பேட்டை – அச்சுவேலி.

[A-746]

மணிவாக்கு

பகுத்தறிவின் மகன்—
ஒத்துப்போதல்!

—வில்லியம் போலிதோ.

# நமதுநோக்கு

## புலியும், நரியும்

காலம் செல்லச் செல்ல இலங்கைத் தமிழர் விடுதலை என்ற விடயம் ஆழத்திலும் அகலத்திலும் அதிகரித்து வருகின்றது.

எவ்வகையிலும் நரி வாலைக் கொண்டு இதனை ஆழம் பார்க்கலாம் என்று பிடிவாதமாக இருப்பது பகற்கனவிற் காணு ம பேய்க்கூத்தாகும். இவ்வித கூத்தில் கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும் எவ்வித அழைப்புமின்றித் தாமாகவே பங்குபற்றுவதில் இன்பங் காண்கின்றன. தமிழ் உயிர்கள் - இளமை, வாலிபம், வயோதிபம் என்ற முப்பிரிவுகளிலும் குடிக்கப்படுகின்றன.

சமரச முயற்சிகள் சற்றே பொறுப்புடன் ஆராயப்பட வேண்டுமென்ற இவ்வேளையில் ஒரு விடுதலைப் போர் இரண்டாகக் குட்டி போட்டிருக்கும் விபரீதத்தை நாம் விழிப்புடன் அவதானிக்க வேண்டும். இதில் எதுவும் புதுமையான த கவில்லை.

சிறிலங்காவின் 'அரசர்களுக்கு' பாரம்பரியமாக வழிகாட்டும் பௌத்த மகா சங்கத்தினர் சந்நிதானத்தில் இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா செயல் முறைப்பாட்டில் இவ்வாறு ஓலமிட்டிருக்கிறார்: ''தமிழ் மார்க்ஸியப் பயங்கரவாதிகள் இந்த நாட்டின் ஆட்சியைக் கைப்பற்ற முனைகின்றனர். இவர்களை முறியடிப்பது முடியாத காரியமாகவிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் எட்டு லட்சம் தமிழர் வாழ்கின்றனர்; அவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகளல்லர். இலங்கை அரசின் இராணுவம் அங்கு குண்டு வீசினால் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர். இந்தத் தர்மசங்கடத்தைத் தவிர்க்க நான் செய்யத் தவறியதேது?''

இன்று பேசப்படும் சமரச முயற்சிகளுக்கு மகா சங்கத்தினரின் ஆசியையும் ஆதரவையும் வேண்டி நிற்கிறார் ஜனாதிபதி என்பது வெள்ளிடை மலை. அதற்குரிய மறைமுக வெருட்டு அப்பேச்சில் தொனிக்கிறது.

சிங்கள ஆட்சியிலும் அதன் அட்டூழியத்திலுமிருந்து நாம் நிரந்தரமாக விடுதலை பெற்றேயாகவேண்டும் என்று அழுங்குப் பிடியாக நிற்கும் தமிழ் இயக்கத்தினரில் புலிகள் முதலிடம் வகிக்கின்றனர். பசித்தாலும் புல்லைத் தின்னாத வர்க்கத்தைச் சேர்ந்தவரென்பதை நன்றாக உணர்ந்தவர்களுக்கு சைவர்கள் வணங்கும் சிவபெருமான் தலைமை தாங்குவதைப் புராணங்கள் வற்புறுத்துகின்றன. புலியைக் கொன்றுவிட்டால் மட்டும் போதாது; அதன் தோலை அரையில் உடுத்துக்கொள்வதே வெற்றியின் உறுதியென்று கொண்டவர் எங்கள் பரமபிதா.

எனவே, புலியின் சின்னத்தைத் தங்கள் இயக்கத்துக்குப் பொறித்து அதன் பெருமைக்குகந்த வழியில் சாதனை புரிந்துவரும் தமிழ்ப் போராளிகளை, ''பயங்கரவாதிகள், மார்க்ஸியவாதிகள்'' என்று பாசாங்கு செய்து உலகின முதலாளித்துவ ஆட்சிகளின் ஆதரவை மட்டுமல்ல உள்ளூர் வாழும் மகாசங்கத்தினரையும் கைக்குள் போட முயல்வது மதியீனம்.

எந்தச் சமரசப்பேச்சிலும் மகாசங்கத்தினரும் அவர்கள் வழி நிற்கும் பௌத்த தீவிரவாதிகளும் இங்கு நடைபெறுவது பௌத்த சிங்கள விடுதலைப்போர் என்பதை நினைவூட்டுவதில் பின்னிற்பதில்லை. சிங்களமக்களும் அவர்கள் வளர்த்துவரும் பௌத்தமும் அதன் கலாசாரமும் ''உலகில் வேறெங்கும் இல்லை; எனவே தமிழர் போராட்டம், துவும் தென் இந்தியா விடமும் கலந்துவிட்டால் சிறிலங்கா என்ற பேச்சுக்கே இடமில்லை'' எனும் பிடிவாதம் கொண்டிருக்கின்றனர் பௌத்த சிங்கள விடுதலைப் போராளிகள்.

போரிலும் மேலானது சமரசம் என்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார்; ஆனால் சமரசத்தின் உள்ளுடன் என்னவென்று ஆராயப்படவேண்டும்; அது இன்றேல், அது சுவையற்ற வெறும் ரசம்!

சப்பாத்து காலை வெட்டுவதை அதை அணிபவனே அறிவான். அதேபோல்இன்றைய மாகாண சபைத்திட்டம் தமிழ்மக்களின் சுதந்திரத்துக்கு- முக்கியமாக அவர்களின் உயிர்ப்பாதுகாப்புக்கு உண்மையான இடமளிக்கிறதா? அந்த நோக்கத்தை நேர்மையான வழியில் நிறைவேற்றும் விதை காடு போல்அடர்ந்திருக்கும் பாரிய திட்டத்தில் எங்காவது காணப்படுகின்றதா?

''அந்தகைய நேர்மையான திட்டம் இது என்று காணப்படுமானால் அதனை அடிப்படையாகக் கொண்டு தமிழ்ப்போராளிகள் விடுக்கும் பெரும்பான்மையான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், போராளிகள் தங்கள் இலட்சியத்தைத் தீவிரப்படுத்தாது சமரச உடன்பாட்டுக்கு ஒத்துக் கொள்ள வேண்டும்'' என்கிறார் சமத்துவ சமுதாயம் என்ற கோட்பாட்டை நடைமுறைப்படுத்தும் அருள்நெறித்தலைவர் குன்றக்குடி அடிகளார்.

பரந்த தேசியஅடிப்படையில் அரசியலை நோக்கும் பண்புடைய மதத்தலைவர் அடிகளாரென்பதை யாரறியார்?

நரியின் குள்ளமும், புலியின் பயங்கரத்தன்மையும், சமரசத்துக்கு மாறான பண்புகள்; ஆனால் புலி நரியின் காலை விட்டுப் புங்கம் வேரைப் பிடித்தகதை நினைவுக்கு வருகிறது ஆனால் பனங்காட்டு நரியே புலியானதானால் எந்தச் சலசலப்பும் பலிக்காது.

# தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தியது ஏன்?

தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகள் பல கெரில்லா விடுதலைப் போராளிகள் குழுக்கள் உருவாக ஏதுவாயிருந்திருக்கின்றன. இக்குழுக்களொவ்வொன்றுக்கும் தனித்துவ முத்திரையும், சித்தாந்தமும், சொந்தப் போராட்டஉத்திகளும் இருக்கின்றன.

இக்குழுக்களில் பெரிதான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ள 'விமோசனத்தை நோக்கி' என்ற பிரசுரம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: ''குருட்டுத்தனமான வீறினாலோ அன்றி அதிசூரத்தனத்தினாலோ எமது கெரில்லாப் போராட்டம் உருவாகவில்லை. இது ஒரு வரலாற்று வழிப்பட்ட தேவையால், சகிக்க முடியாத தேசிய அடக்குமுறைச் சூழ்நிலைமைகளால் உருவான ஒன்று.''

சமஷ்டி சுயபரிபாலனம் கோரி 1961ல் தமிழ்த்தலைவர்கள் மேற்கொண்ட சத்தியாக்கிரக இயக்கம் நசுக்கப்பட்டதுடன் தமது அடிப்படை உரிமைகளை நாடாளுமன்ற வழிப்பட்ட அஹிம்சை மார்க்கத்தில் வென்றெடுக்கும் தமிழ் வாலிபர்களின் எண்ணம் சுக்குநூறாகியது. இந்த ரீதியில் அடக்குமுறையாளரின் வன்செயல் அடக்கப்பட்டவர்களின் அஹிம்சையை வாய்மூடப்பண்ணி விட்டது; சிங்களப் பேரினவாதத்தின் சக்தி தமிழர்களின் அஹிம்சையை நசுக்கி விட்டது. மனிதத்தத்துவத்தின் அனைத்துஒழுங்கு நெறிகளையும் மீறிஇன விரோதப்பான்மை கொண்ட அடக்குமுறையாளனின் இராணுவ பலத்தின் முன்னால் அஹிம்சையின் தார்மீகபலம் செல்லாக்காசாகி விட்டது என்பதைத் தமிழர் அனுபவ ரீதியாக உணர்ந்தனர். அடக்குமுறையாளரைப் பொறுத்தளவில் இந்நிகழ்ச்சியானது தமிழர் கோரிக்கைக்குத்தகுந்த பதில் இராணுவ பயங்கரவாதமே என்ற தமிழ் அரசியல் கிளர்ச்சியின் அஹிம்சா ரீதியான அத்திவாரம் துப்பாக்கி முன்னால் பலஹீனமான நபுஞ்சகமான

> கல்கத்தா ''ரெலிகிராஃப்'' சஞ்சிகையில் அனிதா பிரதாப் தமிழ் இளைஞர் இயக்கங்கள் பற்றி எழுதிய கட்டுரையின் சில பகுதிகள்.

ஒன்றே என்ற - எண்ணத்தை வலுப்படுத்தியது (விமோசனத்தைநோக்கிநூலிலிருந்து) எனவே இளைஞர்கள்துப்பாக்கி ஏந்தத் தலைப்பட்டனர்.

அரசாங்கத்தின் பாரபட்சமான கொள்கைகள் தமிழ் இளைஞர்களின் தீவிரப்போக்கினுக்கு மேலும் தூபமிடுவதாக அமைந்தது. தமிழிளைஞர்களின் கோபமும் விரக்தியும் அரச அடக்குமுறைக்கு எதிரான ஆயுதப் போராட்டமாக உருமலர்ந்தன.

1976ல் 'தமிழ் புலிகள்' தமிழீழவிடுதலைப்புலிகள்என்ற மகுடத்தின் கீழ் பரவலான ஸ்தாபனமயப்பட்டதுடன் தமிழ்இளைஞர்களின் போராட்டம் புதுவீச்சுப்பெற்றது. பிறிதொரு இளைஞர் இயக்கமான 'புளொட்'டின் தலைவர் திரு. உமாமகேஸ்வரன் திரு. பிரபாகரனின் நெருங்கிய சகாவாக முன்னமிருந்த பொழுதிலும் சித்தாந்த ரீதியிலான பூசல்கள், போராட்ட உத்திகள் வேறுபாடு ஆகியவற்றினால் அவர்கள் பிரிய நேர்ந்தது. இயக்கங்கள் மத்தியிலான ஐக்கியத்தை ஓரளவுக்கேனும் பேணுகின்ற நோக்கில் 1976 ஜனவரியில் உருவாகிய 'ஈரோஸ்' 1981ல் உருவாகிய இடதுசாரித் திசையமைவு கொண்ட 'ஈ பி. ஆர் எல் எவ்' 1969லேயே அமைக்கப்பட்ட 'ரெலோ' ஆகியவற்றுடன் தமிழீழ விடுதலைப்புலிகள் இணைந்து ஈழதேசிய விடுதலை முன்னணி (ஈ என். எல். எஃப்) உருவாகியது.

தமிழ் இளைஞர் விடுதலை இயக்கங்கள் மத்தியில் பல்வேறு அபிப்பிராய பேதங்கள் இருந்த பொழுதிலும் இலங்கை அரசு ஆயுதப்படைகளின் புதிய தாக்குதலுக்கு எதிராக தற்போது அவை கூட்டான எதிர்த்தாக்குதலை நிகழ்த்தி வருகின்றன.

யாழ்,குடாநாட்டில் விடுதலை இயக்கங்களின் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் செல்வாக்கு மேலோங்கியிருக்கின்ற பொழுதிலும் இந்தச் செல்வாக்கையும் அதிகாரத்தையும் இயக்கங்கள் துஷ்பிரயோகிக்காமலிருக்க வேண்டுமே என்ற அங்கலாய்ப்பும் மக்கள் மத்தியில் இல்லாமலில்லை.

# ஒன்றரை நூற்றாண்டு கல்வித்துறையில் உன்னத பணி!

ஒரு கிராமத்தின் வளர்ச்சி முன்னேற்றம் ஆகியன அக்கிராமத்தில் அமைந்துள்ள பாடசாலைகளின் கைகளில் தங்கியுள்ளன. 150 ஆண்டுகளாக கல்விப்பணியாற்றி பல அறிஞர்களைத் தோற்றுவித்த பெருமை கொண்டுள்ளது மானிப்பாய் மெமோறியல் கல்லூரி.

கல்லூரிகளின் முன்னோடிகளாகவும், வழிகாட்டிகளாகவும் சிறந்து விளங்குபவர்கள் அக் கல்லூரியின் அதிபர், ஆசிரியர், பெற்றோர்' மாணவர்கள் தான் ஒன்றரை சகாப்தத்தை கல்விப்பணிக்கு அர்ப்பணித்துவிட்ட களிப்பில் பூரித்து நின்று மெமோறியலுக்கு இன்று விழா எடுக்கின்றனர் மானிப்பாய் மக்கள்.

வடமாகாணக் கல்வித் தந்தையான கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபையின் பிரதம கணக்காளர் திரு. சந்திரசேகரம் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட ஆயர் வண. டி. ஜே. அம்பலவாணர், திருமதி அம்பலவாணர் உள்ளிட்டு பல அறிஞர்களும் இன்றைய விழாவில் பங்குகொண்டு சிறப்பிக்கின்றனர்.

இங்கு கல்வி கற்பித்த பல ஆசிரியர்களை வரவழைத்து கௌரவித்து மதியபோசனமளித்து நன்றிக்கடனை இன்று செலுத்துகின்றனர் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்.

மிஷனரிமார்களால் 1836-1840 ம் ஆண்டுக் காலங்களில் யாழ்ப்பாணப் பகுதியிலே ஆங்கிலக் கல்வியைப் பரப்பும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட தொன்மை வாய்ந்த கல்லூரிகளிலே இரண்டாவதாக இக் கல்லூரி விளங்குகின்றது.

நல்ல நோக்கு சமுதாயப்பணி ஆகியவற்றில் சிறந்து விளங்கும் இக் கல்லூரியில், சர்வமத ஒருமைப்பாட்டினை வலியுறுத்தும் சின்னமாக எதிரும் புதிருமாக அமைந்துள்ள சைவ-கிறிஸ்தவ வழிபாட்டு நிலையங்கள் விளங்குகின்றன.

ஒழுக்கத்தைக் கற்றுத் தருபவை கல்லூரிகள். மானிப்பாய் மக்களின் ஒழுக்கத்தை நெறிப்படுத்திவரும் மானிப்பாய் கிராம பாடசாலைகள் யாவற்றுள்ளும் சிறந்து விளங்கும் பெருமையும் இக்கல்லூரிக்கே உண்டு.

35 ஆசிரியர்கள், 12 வசதிக் கட்டண ஆசிரியர்கள், 3 தொண்டர் அசிரியர்கள் இங்கு

> மானிப்பாய் மெமோறியலின் 150-வது ஆண்டு விழா

கல்விப்பணியில் ஈடுபட்டுள்ளனர். முதலாம் படிவம் தொட்டு பதின்மூன்றும் படிவம் வரையான வகுப்புக்களில் மொத்தம் 34பிரிவுகளில்சுமார் 1300 மாணவர் வரை கல்விச் செல்வத்தை பெற்றுவருகின்றனர்.

மெமோறியல் கல்லூரியின் வளர்ச்சியில் பங்கேற்றுக் கொண்டவர்களுள் முன்னாள் அதிபர்களாக விலங்கிய திருவாளர்கள் வேலாயுதம், திருவிளங்கம், வைரவநாதர், பேஜ், எஸ் வி அழகரட்ணம, ஜே வி. தப்பிநாயகம் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மெமோறியல் தாய் ஈன்றெடுத்த பெருமாகன்களில் வரலாறு படைத்த செம்மல்களான, சுவாமி ஞானப்பிரகாசர், தமிழ்த் தந்தை எஸ் ஜே. வி செல்வநாயகம், கலையரசு சொர்ணலிங்கம், கட்டடகலை

**வி. ப. சர்மா**

ஞர் வி எஸ். துரைராசா ஆகியோரை எண்ணி பெருமைப்படாதிருக்க முடியாது.

பல்கலைக்சழக புகுமுக வகுப்புக்களை ஆரம்பித்து உயர் கல்விக்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொண்டுள்ள இக் கல்லூரி ஆண்டுதோறும் பல மாணவரை பல்கலைக்கழகத்துக்குஅனுப்பிவைத்ததும் பெருமை கொள்கிறது.

கல்வித்திணைக்களம் நடத்தும் கல்வி, சமய விளையாட்டு போட்டிகளில் எல்லாம் மாவட்டரீதியில் மட்டுமன்றி அகில இலங்கைரீதியிலும் பங்குபற்றி பல விருதுகளைப் பெற்றுள்ளது.

இன்று இக்கல்லூரியின்வளர்சியில் கண்ணாக இருந்து பொன்னுகப்பேணி வழிநடத்தும் அதிபர் திரு வி. பொன்னுத்துரை மானிப்பாய் மக்களுக்கு கிடைத்த பொன்னான பொக்கிஷம்.

அவருக்கு உதவியாக விளங்கும் ஆசிரியர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள், அபிவிருத்திச்சங்கத்தினர் ஆகியோருடன் நாமும் சேர்ந்து இன்றைய விழாவை சிறப்பிப்போம்; பெருமைப்படுத்துவோம்!

## கல்வி பொருட்காட்சி

யாழ்ப்பாணம், சனி.

திருநெல்வேலி இந்து வித்தியாலயத்தின் கல்விப் பொருட்காட்சி இன்று நடைபெறவுள்ளது

நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சு சிவநாயகமூர்த்தி பொருட்காட்சியைத் திறந்து வைப்பார். (ஐ)

## குறுநாவல் வெளியீடு

யாழ்ப்பாணம் சனி

இணுவையூர் சிதம்பரதிருச்செந்திநாதனின் ''என்றுவது ஒருநாள்'' குறுநாவல் வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் இணுவில் கலை இலக்கிய இளைஞர் வட்டத்தின் ஆதரவில் நல்லூர் இந்துவிடுதியில் நடைபெறுகின்றது.

## பாலர் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், சனி

பாலர் கலவிக்கழகம் நிர்வகிக்கும் பாலர் பாடசாலைகளுக்கிடையேயான 15-வது வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8-30 க்கு யாழ். இந்துக்கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

மேற்படி கழகத்தலைவர் திரு. ஆ செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இவ் விளையாட்டுப் போட்டிக்கு யாழ் இந்துக்கல்லூரி உபஅதிபர் திரு. பி. மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (மா)

## தீவுப்பகுதியில் இன்றும் நாளையும் நடைபெறும் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம். சனி

தீவுப்பகுதி ரீதியிலான 'நொக்கவுட்' முறை உதைபந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது

சரவணை திருவள்ளுவர் விளையாட்டுக்கழகத்தின் 28 வது ஆண்டு நிறைவுவிழாவையும் 7 வது ஆண்டுவிளையாட்டு விழாவையும் ஒட்டி இவ்வுதைபந்தாட்டப்போட்டி நடைபெறுகிறது.

லிடோ

காலை 10-30, 2-30, 6-30
M.G.R -லதா-நம்பியார்-தேங்காய் நடித்த
நீதிக்குத் தலை வணங்கு
(புத்தம் புதிய பிரதி)

வெலிங்டன்

10-30, 2-30, 6-30
சிவாஜி-உஷாநந்தினி
சாரதா-மனோகர் நடித்த
என்னைப் போல் ஒருவன்
[கலர்]

வின்ஸர் திரையரங்கில் அனேகரின் வேண்டுகோளிற்கிணங்க மீண்டும் முரளி - குயிலி நடித்த
பூவிலங்கு
சில தினங்கள் மட்டும் காண்பிக்கப்படும்.
வின்ஸர் மினியில்
8, அடித்திரையில்
புரட்சிக் கனல்
விஜயகாந்த் -நளினி நடித்த
அலை ஓசை

## திருவிழா நடைபெறாது

யாழ்ப்பாணம், சனி.

ஆனையிறவு புல்லாவெளி புனித செபஸ்தியார் திருவிழா இம்முறை நடைபெறமாட்டாது எனமுகமாலை பரிபாலன சபையினர் தெரிவிக்கின்றனர்.

## பாதுகாப்பு நடவடிக்கை

நெல்லியடி வெள்ளி

நெல்லியடி பாதுகாப்புச் சபை நெல்லியடி பட்டின சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள சகல வட்டாரங்களிலும் உள்ள மக்களின் பாதுகாப்புத்தொடர்பாக சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

### 31-ம் நாள் நினைவஞ்சலி



சீவியத்தில் நேசித்தவர் ... களே
மரணத்தில் என்னை
மறவாதீர்கள்

**மா. எட்வின் கந்தசாமி**
[யாழ்ப்பாணக்கல்லூரி ஊழியர்]

மண்ணில் மலர்வு:
27-04-1939
விண்ணில் நுழைவு:
05-06-1986

கூடி மகிழ்ந்தோமே
கொடுத்துவைத்தோம் நாமென்று
ஓடி மறைந்துவிட்டாய்
கல்லறையில் வைத்து
கண்ணீரால் நனைத்திட்டோம்.
உலகில் வைக்க
இயலாமைநாம்
நடைப்பிணங்கள் ஆகி விட்டோம்
நாடி நீர்வரும் மனை
இன்று களை இழந்து
கிடக்குதையா
வாடிக்கலங்கும் உன்
பனைவி, மக்கள்,
சகோதரர்கள்
துடிதுடித்து மனங்
குமுறும் மைத்துனர்கள்
உன் நண்பர்கள்
கோடிமுறை
வேண்டுகிறோம்
உன் ஆத்மா
சாந்தி பெறுக.

இவரின் ஆன்மா சாந்தி அடைய மல்லர் திருக்குடும்ப ஆலயத்தில் சனிக்கிழமை ,05-07-1986] காலை 8 மணிக்கு திருப்பலியுடன் அந்தியேட்டி நிகழ்ச்சியிலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கிறோம.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
சகோதரர்கள்,
மைத்துனர்கள்.

சுவாமி ஞானப்பிரகாசர் வீதி,
மல்வத்தை,
உடுவில். [C-3286]

## நடவடிக்கை---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெரும் தொல்லைக்குள்ளாக்கப்படுகின்றனரெனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்தியக் கடற்பிரதேசத்தில் இந்தியக் கரையோரப் பாதுகாப்புப் படையினர் ரோந்தில் ஈடுபட்டும், இந்திய மீனவரின் படகை இலங்கைக்கடற்படையினர் பறிமுதல் செய்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (செ)

### சபிண்டீகரண அழைப்பு



**கணபதிப்பிள்ளை நாகரத்தினம்**

தோற்றம்: 05- 02- 25
நிறைவு: 05- 06- 86

எங்கள் குடும்பத் தலைவரின் இறுதி சடங்குகளில் அஞ்சலி செலுத்தி ஆறுதல் கூறியவர்களுக்கும் பல்வேறு வகையில் உதவி ஒத்துழைப்பு நல்கிய உறவினர்கள், நண்பர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துவதோடு 05- 07- 1986 சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் சபிண்டீகரண கிரிகைகளில் பங்கு கொள்ளுமாறு அன்புடன அழைக்கின்றோம்,

மனைவி:
நாகரத்தினம் சிந்தாமணி.

பழங்கிணற்றடி
பிள்ளையார் ஒழுங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
(C 3305)

## தப்பியவருக்கு மீண்டும் தண்டனை

மூதூர், வெள்ளி,

போராளிகளைக் காட்டிக் கொடுக்கும் சமூகவிரோத செயல்களில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை மின் கம்பத்துடன் கட்டிவைக்கப்பட்டு துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

திருமலை - நிலாவெளியைச் சேர்ந்தஆறுமுகம் யோகராசா (26 வயது) என்பவருக்கே இத் தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

கடந்த 4 மாதங்களுக்கு முன்னரும் இந்த நபர் மின் கம்பத்துடன் கட்டிவைக்கப்பட்டு துப்பாக்கியால் சுடப்பட்ட பொழுது சிறுகாயத்துடன் தப்பித்துக்கொண்டவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (மா)

## சாம்பல்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எடந்து இங்குள்ள குடும்பங்கள் வெளியேறிக் கொண்டிருக்கின்றன,

கடந்த மாதம் 26ம் திகதி சாம்பல்தீவு ஆயுதப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டதும் பொது மக்களிற்பலர் சுட்டுக் கொல்லப்பட்டதுப் தெரிந்ததே. [மா]

## இன்று

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த 'மெய்வல்லுநர்' போட்டி இன்று பிற்பகல் 2-மணிக்கு மேற்படி கல்லூரியின் புதிய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு யாழ். மாவட்ட பிரதம விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. எஸ்.மரியதாஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

0 0 0

### சாம்பியன் மோதல்

யாழ். றேட்டறிக் கழகத்தின் ஆதரவில் யாழ். நகரில் நடைபெறும் 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் இறுதியாட்டங்ள் இன்று, பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் யாழ் உதைபந்தாட்ட லீக்,பருத்திக்துறை உதைபந்தாட்ட லீக சாம்பியன் கோஷ்டிகள் மோதுகின்றன. (வி)

எமது புதிய வெளியீடுகள்

1. சிவகுமார் ★ அம்பிகா
"இசைபாடுந் தென்றல்"
[PYRAMID MASTER]
2. ஜெய்சங்கர் ★ ஊர்வசி [இருவேடம்]
"கைதியின் தீர்ப்பு"
[SUHAN MASTER]
3. பிரபு ★ ஜெயஸ்ரீ ★ விஜயகாந்
"நம்பினோர் கெடுவதில்லை"
[PYRAMID MASTER]
4. ராஜ்குமார் ★ ரேவதி
"தெய்வ மகள்"
[PYRAMID MASTER]
5. கமல் ★ அம்பிகா ★ டிம்பிள் கபாடி
"விக்ரம"
[PYRAMID MASTER]
6. S. V. சேகர் ★ ஜீவிதா
"சோறு"
[SUHAN MASTER]
7. S. V. சேகர் ★ குட்டி பத்மினி
"வண்ணக் கோலங்கள்"
[CAMERA COPY]

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[C 3292] தொலைபேசி: 23665

## போராளிகள் தாக்குதல்

மூதூர் வெள்ளி

திருமலை மாவட்டத்தில் 'குரங்குப்பாலம்' பகுதியில் உள்ள இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் ட்ரக்கில் ரோந்து சென்று கொண்டிருந்தபொழுது போராளிகள் தரப்பிலிருந்து 'கிறனைட்' வீசப்பட்டது.

நேற்றுக்காலை இச்சம்பவம் இடம் பெற்றது.

'ட்ரக்' கின்மீது 'கிறனைட்' வீசபபட்டதைத் தொடர்ந்து போராளிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே நேரடி மோதல் இடம்பெற்றது. சில மணித்தியாலங்களாக இப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் தொடர்ச்சியாகக் கேட்டவண்ணமிருந்தன.

இச்சம்பவத்தில் ஏறபட்டுள்ள சேதவிபரங்கள்பற்றி தெரிவிக்கப்படவில்லை. (மா)

## ஒரு மாதமாக--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த ஒருமாத காலமாக கிளிநொச்சியில் உள்ள அலுவலகங்கள் இயங்கவில்லை. போக்குவரவும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. பிரதான ஆஸ்பத்திரிமூடியநிலையிலேயே உள்ளது. தனியார் வைத்திய சாலைகளும் மூடப்பட்டுள்ளன.

## மாகாண--

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஒரு பகுதி தமிழர்கள் வசம் போய்விடும் என்றும், இத் திட்டமானது சிங்கள மக்களை அழிப்பதற்கான ஆரம்பக்கட்டமேயென்றும் அச்சம் தெரிவித்து மகஜர் ஒன்றையும்இலங்கை அரசுக்கு அனுபபிவைக்கும் பொருட்டு தூதரக அதிகாரியிடம் கையளித்தார்கள். (பி)

## நடுக்கடலில்----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கி வேட்டுகளும் தீர்க்கப்பட்டன. நாங்கள் படகுகளை நிறுத்தியதும், மூன்று படகுகளிலுமிருந்த இலங்கை க் கடற்படையினர் எங்கள் படகைச் சுற்றி வளைத்து சரமாரியாக துப்பாகிப் பிரயோகம் செய்தனர்.

''எனக்கு வயிற்றிலும், இரு தொடைகளிலும் காயம் ஏற்பட்டது ஒருமாதிரி என்னை சுதாகரித்துக்கொண்டு என்ஜின் உள்ள பெட்டிக்குள் இறங்கிப் பதுங்கிக் கொண்டேன்.

'கடற்படையினர் எமது வள்ளங்களுக்குள் ஏறி துப்பாக்கிச் சூட்டுக்குபபலியானவர்களின் சடலங்களை இழுத்திழுத்து கடலுக்குள் வசினர்கள்.

''படகுகளுக்குள் ளிருந்த டீசல்பரல்கள் ஸ்பனர்செட், உணவுசமைக்கும் பாத்திரங்கள் மற்றும் உணவுப்பொருட்கள் ஆகியவற்றை சூறையாடிவிட்டு படகுகளில் காணப்பட்ட இரத்தக்கறை லை கடல் நீரால் கழுவினார்கள் பின்னர் தமதுபடகுகளில் ஏறிச்சென்று விட்டனர்

''அவர்கள் செல்லும் பொழுது இருபடகுகளின் இயந்திரங்களையும் இயங்காமல் செய்து விட்டுச் சென்றார்கள்.

''இன்று காலை (வெள்ளி) 7 மணியளவில் கடற்கரையோரமாக எமது படகு கரை ஒதுங்கிய போது சில இளைஞர்கள் படகை புங்குடுதீவு கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தது பின்னர் தெரிய வந்தது.

படகுடன் எம்மைக் காப்பாற்றியவர்கள் தம்மை தமிழீழ விடுதலைப் புலிகள் என்று அறிமுகம் செய்ததுடன் என்னை மயக்கம் தெளிய வைத்து யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்தார்கள். [வேலணை-ஐ மா]

# பிரயாண ஒழுங்குகள்

## ✶ கனடா ✶ டென்மார்க்
## ✶ சவூதி அரேபியா

அ. கனடா செல்ல விரும்புவோர்க்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை கனடா வரை அழைத்துச்செல்வார். செல்ல விரும்புவோர் யூலை 15-ம் திகதிக்குப் பிந்தாமல் தொடர்பு கொள்ளவும்.

ஆ. டென்மார்க்குக்கு எமது முகவர் வாரத்திற்கு ஒரு தடவை உங்களை அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடன் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.

இ. சவூதி அரேபியாவுக்கு (Labour) தொழிலாளர்கள் உடன் தேவை. செல்ல விரும்புவோர் 15-ம் திகதிக்குப் பிந்தாமல் தங்களது பாஸ்போட்டுடன் 6 படங்களும் கொண்டுவந்து நேரில் எமது ஸ்தாபனத்தில் சமர்ப்பித்து வெற்றிடங்களுக்கு முன்னுரிமை பெற்றுக்கொள்ளவும்.

ஈ. கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கான பிரயாண சேவை (Colombo) கொழும்பிலிருந்து நேரடியாக நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

யாவற்றுக்கும் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**N. BALA,**
திருச்செல்வம் வீதி, கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

குறிப்பு: (பஸ் வழி இல. 764 பலாலி வீதி, கோண்டாவில் சந்திக்கு அருகாமை.)
(C 3250)



## வாடிக்கையாளர்கள் பாவனையாளர்களுக்கு
## தோலகட்டி தயாரிப்பாளர்களின்
# ஓர் முக்கிய அறிவித்தல்

தற்போது உள்ள கால சூழ்நிலையிலும் மூலப் பொருட்களின் விலை உயர்வு காரணமாகவும் எமது நெல்லிரசத்தின் விலையை அதாவது மொத்தவிலையை உயர்த்தி உள்ளோம். வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள் இவ்விலை உயர்வை தற்கால சூழ்நிலையில் பெரிதாக எண்ணமாட்டீர்கள் எனவும் எமக்கு நல்லாதரவு தருவீர்கள் எனவும் தாழ்மையுடன் எண்ணுகின்றோம்.

நன்றி.

போலிகள் கவனம்!!

நெல்லிரசம் மொத்த விலை ரூபா 22/-
ஆகக்கூடிய சில்லறை விலை ரூபா 24-50

இது ஓர் உள்ளூர் உற்பத்தி என்பதை மறவாதீர்கள்.

ஏகப் பிரதிநிதிகள்:

ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்,
யாழ்நகர்.

செபமாலை தாசர்சபை
தோலகட்டி,
வயாவிளான்.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற

**வரணி மிசன் விற்பனை நிலையம்**
145, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
[A 762]



# பிரயாண ஒழுங்குகள்
## டென்மார்க், கனடா

(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)
ஜூலை 7ம் திகதி எமது முகவர் கூட்டிச்செல்வார்.
எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

✶ லிபியா ✶ குவைத்
✶ சவூதி அரேபியா
ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.
அத்துடன்
பாஸ்போட், BOND, ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.

**யூனிவேர்சல் ஏஜென்சி,**
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(A 757)


## இணையில்லாத சேவை புரிந்த அதிபர்

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் செல்வி பத்மாவதி இராமநாதன் அவர்கள் கல்லூரியின் வளர்ச்சியே தனது இலட்சியமாகக் கொண்டு அயராது சேவையாற்றிய தன்னிகரில்லாத் தலைவி 1950 (1-7-50) ம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் யாழ் இந்து மகளிர் கல்லூரியின திறம் வாய்ந்த ஆசிரியைகளுள் ஒருவராகக் கடமை புரிந்தவர். அவரிடம் கல்விபெறும் வாய்ப்பினைப் பெற்ற மாணவிகள் எவராவது என்றும் அவரை மறக்கவும் முடியாது. பெரும்பாலான மாணவிகள் மிகச சிறந்த பதவிகளைவகித்தும் அவரிடம் கற்றுக் கொண்ட கல்வியறிவினை விட நல்ஒழுக்கம், கட்டுப்பாடு, தெய்வ நம்பிக்கை கொண்டவர்களாகத் திகழ்வதைக் கண்கூடாகக் காண முடியும். அவர் ஆங்கிலம், அரசியல் போன்ற பாடங்களை மிகச் சிறப்பான முறையில் கற்பித்தவர். அவரிடம் கல்வியறிவினைப் பெறும் வாய்ப்புபெற்ற எந்த ஒரு மாணவியாவது அவரால் தாம் பெற்றநன்மை அதிகம் என்றே கூறுவர்.

பதினேழாண்டுகள் பொறுப்பு வாய்ந்த ஆசிரியையாகவும், 1967 ம் ஆண்டு முதல் உப அதிபராகவும், 1975 மே முதல் சிறந்த அதிபராகவும் தன் முழுச்சேவையை நிறைவேற்றிய மன நிறைவுடன் 1986 ஜூன் மாதத்துடன் ஓய்வு பெற்றார் அன்னாரின் சேவை நலம் பாராட் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் விழா எடுக்கப்பட்டது. கல்லூரி மாணவிகளும் ஆசிரியைகளும், ஏனைய ஊழியர்களும் தம் நன்றிக் கடனை எங்ஙனம் தீர்ப்போம் என்று வகையறியாது பூமாலைகள் மலையாகக் குவியுமளவுக்கு மரியாதை செய்தனர் பாமாலைகளாலும், வாழ்த்தினர். ஆசிரியர்களும் மாணவிகளும் தம் நன்றியறிதலை கருததுரைகள் மூலமாகவும் வாழ்த்துரைகளாலும் வழங்கினர்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் புகழ் சிறக்க முப்பத்தாறு ஆண்டுகள் முழுப் பணிபுரிந்த அதிபர் செல்வி ப. இராமநாதன் அவர்கள் ஒவ்வொரு பிரார்த்தனைக் கூட்டத்தின்போதும் கூறிய சிறந்த நல்லுரைகள் என்றென்றும் மாணவியரின் மனங்களில் நின்று வழிகாட்டும். — கா. சிவம்நசன்

## தற்பெருமை இல்லாதவர்

யாழ் இந்துமகளிர் கல்லூரி அதிபர் செல்வி ப. இராமநாதன் ஓய்வு பெறுவது நமது கல்லூரிக்கு மாத்திரமின்றி யாழ் குடாநாட்டிற்கே ஒரு நட்டமாகும் நாம் சைவசமய கோட்பாடுகளோடு ஒட்டி வாழவேண்டும். அத்துடன் ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும். அதற்கு வீட்டில் தாய், தந்தையரின் போதனையுடன் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்க்கே கூடியபங்கு உரியது என்பதை நான் படிக்கும்போது இவரால் உணர்ந்தேன். எனக்கு இவர் குருவாகக்கிடைத்தது நான் செய்த பாக்கியமேயாகும்.

இவர் பாடசாலையில் படிக்கும் எல்லாப்பிள்ளைகளும் நல்ல சித்தி பெறவேண்டும் என்று அயராது முயற்சி எடுத்தார். அதனுல் ஒரு சாதனையை இவர் நிலைநாட்டியுள்ளார். இவரது முயற்சியால் எல்லாத்துறைகளிலும் யாழ் இந்துமகளிர் கல்லூரிமுன்னணியில் நிற்கிறது.

ஒருபெண் படித்தால் அந்த சமுதாயத்துக்கே உபயோகமாகும் என்பதற்கு எமது அதிபர் ஒரு சிறந்த சான்றாகும்.

ஒருமுறை விவேகானந்த சபை சமயபாடப்பரீட்சைக்கு விண்ணப்பப்பணம் கட்டும் நேரம் என்னிடம் பாடசாலையில் பணம்இல்லை. நான்மத்தியானம் வீட்டிற்குப் போய்த்தான் கொண்டுவர வேண்டும் ஆனுல் நேரம் பாதாது எனவே அவரேஎனக்குப்பணம் கட்டி விண்ணப்பத்தை அனுப்பினுர். நான் பின் பணம் கொடுத்தும் வாங்க மறுத்துவிட்டார்.

ஆடம்பரமில்லாத தோற்றமும் ஆற்றலும் எல்லா மாணவிகளின் இயல்பையும் அறிந்து வைத்திருக்கும் ஆற்றலும தற்பெருமையில்லாத குணமும் இவர் ஒரு சிறந்த அதிபராயிருப்பதற்கு காரணங்களாயிருந்தன.

— செல்வி அ. பரிமளம்

## பாராட்டுவிழா ஒத்திவைப்பு

சாவகச்சேரி, வெள்ளி.

கடந்த சனிக்கிழமை கைடி நவில்ட் பாடசாலையில் நடைபெறவிருந்த பேராசிரியர் கு.நேசையாவின்பாராட்டு விழா நிகழ்ச்சிகள் அன்றைய தினம் கைதடி-நாவற்குளிப் பகுதியில் இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்கள் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

## மீண்டும் தலைவரானர்

யாழ்ப்பாணம் சனி

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சங்கத் தலைவர் திரு. ஆ. குணரத்தினம் தலைமையில் நடந்தேறியது. இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு ஆ. குணரத்தினம், உப-தலைவர் திரு க.குமாரதாசன், இணைச் செயலாளர் திரு. பொ. கந்தசாமி, - திரு. ப. டே. சற்குணராஜா, பொருளாளர் திரு. யோ. ஜெயக்குமார், உப - பொருளாளர் திரு. சி. வ. சிவகுமாரன், பொதுநல உத்தியோகத்தர் திரு க இரத்தினசபாபதி, பத்திராதிபர் திரு. நா. கணேசலிங்கம், நிர்வாகப் பிரிவுப் பிரதிநிதி திருமதி கி. நி. பாலச்சந்திரன், பராமரிப்புப்பிரிவுப் பிரதிநிதி திரு. கு. சுரேந்திரன், நூலகப்பிரிவுப் பிரதிநிதி திரு. செ. பத்மநாதன். நலச்சேவைகள் பிரதிநிதி திரு. ஐ. கோ. சந்திரசேகரம், பாதுகாப்புப்பிரிவுப் பிரதிநிதி திரு. ம. புதகிரசிகாமணி, கலைப்பீடப்பிரதிநிதி திரு வி ரவிராஜ், விஞ்ஞானபீடப் பிரதிநிதி திரு. க. கருணைநந்தராஜா, மருத்துவப்பீடப்பிரதிநிதி திரு சு பாலச்சந்திரன், வைத்தியசாலைப் பிரதிநிதி திரு மா. ஜெகராசா.

## பேச்சுப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம் சனி.

திருநெல்வேலிராமகிருஷ்ணலயத்தின் ஆதரவில் பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமம் நடாத்திய யாழ் மாணவர்களுக்கானபேச்சுப்போட்டிக்கு ஓய்வுபெற்றகல்லூரிஅதிபர் திரு எஸ். ரி சாரி, திருமதி பி முத்துவேற்பிள்ளை, திருமதி க. சிதம்பரநாதன், சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

பரிசுபெற்றோர் விபரங்கள்

**மத்தியபிரிவு**

1ம் இடம் ஸ்ரீ. சாந்தினி (இராமநாதன் கல்லூரி), 2 ம் இடம் இ. ஜெயலட்சுமி (இராமநாதன் கல்லூரி), 3 ம் இடம் செ. ரூபகாந்தி (கொக்குவில் இந்துக்கல்லூரி), 4 ம் இடம் சி லோறனஸ் (ஆர். சி. ரி. எம். எஸ். ஆனைக்கோட்டை), பா. சாயிஜனனி (கொக்குவில் இந்துக்கல்லூரி.)

**மேற்பிரிவு**

1ம் இடம் வே. கல்பனு (யூனியன் கல்லூரி), 2ம் இடம் சே. விக்கினேஸ்வரன், (யூனியன் கல்லூரி), 3ம் இடம் கு.வசந்தராணி (இராமநாதன் கல்லூரி), 4ம் இடம் ப. ஜெயந்தி (யூனியன் கல்லூரி), கு. யசோதா (யூனியன் கல்லூரி).


# பிரயாண ஒழுங்கு

✶ கனடா ✶ டென்மார்க் ✶ பிரான்ஸ்
✶ மே. ஜேர்மனி, ✶ நெதர்லாண்ட்
✶ அவுஸ்திரேலியா.

எமது அனுபவம் வாய்ந்த முகவர்கள் கீழ் காணும் திகதிகளில் உங்களை கூட்டிச் செல்லவுள்ளனர். 15/7, 20/7, 30/7/86

ஈராக் HOSPITAL CLEANERS,
சவூதிஅரேபியா, LABOURERS, அவுஸ்திரேலியா பயண ஒழுங்குடன், பாஸ்போட், BOND, ரிக்கட், விசா, எம்பன செய்து தரப்படும்.

**ரஜீவன் ட்ரவல்ஸ்,**
42. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
PHONE: 23665 B. M .C. OPPOSIT. [C 3238]



# பிரயாண ஒழுங்குகள்

✶ கனடா ✶ ஜெர்மனி
✶ பிரான்ஸ் ✶ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND),
விஸா, ரிக்கற் ஆகியனவும்
செய்துகொடுக்கப்படும்.

## டென்மார்க்

கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**INTERSUN GROUP,**
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய். [A 729]

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

06-07-1986



யாழ்: அரியாலை

**திரு. நாகமணி சுப்பையா**

தோற்றம்: 09-04-1910

மறைவு: 06-06-1986

திதி: 06-07-1986

06 06-1986ல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 06-07-1986 ஞாயிற்றுக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் ஆத்மசாந்திக்காக உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம். அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், ஆறுதல் செய்திகள் அனுப்பியோருக்கும் நன்றிகள் உரித்தாகுக.

மனைவி, மக்கள், மருமக்கள்.
52, A. V. றோட்,
யாழ்ப்பாணம்.

சு. சண்முகரத்தினம்,
கணக்காளர்,
விற்பனைத்திணைக்களம்
வடபிராந்தியம்.

(C 3276)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



**வடிவேலு ஸ்ரீமோகன்**

(உரிமையாளர் மோகன் பிரதர்ஸ்)

பதினாறும் தேதியையும் ஆண்டில் ஐம்பத்தியெட்டையும் மாதங்களில் ஒன்பதையும் பிறப் பெண்ணாய்க் கொண்டு உதித்திட்ட உனக்கு பேருவகை கொண்டு பேரிட்டார் மோகனென்று மோகனமாய் வாழ்ந்தாய் பலரை மோகிக்கவைத்தாய் நிந்தனை புரியவில்லை யாரையும் நிர்கதியாக்கவில்லை நின் மதிப் பெருமூச்சில் உற்றம் திளைக்கையிலே எண்பத்திநாலில் எமைவிட்டு நீந்தாய் என் செய்வோம் - எம்பயன் உன்புன்சிரிப்பில் மயங்கி நின்ற எம் உள்ளம் ஈராண்டு காலமதை இறைவன் காலடியில் உன்நாமம் செல்லி விழி நீர்பெருக்கி இறைஞ்சுகிறோம் நாமே.

தந்தை, தாயார், சகோதரர்கள்.

அபிராமி இல்லம்
210, காரைநகர் வீதி,
யாழ்ப்பாணம்.

[C-3284]

## இன்றைய பலன்

மாதம்: ஆனி
திகதி: 21 (5-7-86)
கிழமை: சனிக்கிழமை
நக்ஷத்திரம்: மிருகசீரிடம்
திதி: திரயோதசியின் பின் சதுர்த்தசி

மேடம்: பொருள் நழுவக்கூடும் பிரிவுத்துயர் வாட்டும். இருள் படர்ந்த சம்பவம் ஒன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனையைத் தரலாம்.

இடபம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும் சிந்தனை சிலந்தி வலைப்பின்னும் குடும்பத்திலும் துன்பம் படரலாம்.

மிதுனம்: சுற்றுடலில் மதிப்பு உயரும். அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்துகிடைக்கும் வாழ்க்கையும் வருத்தியாகும்.

கடகம். வாகனச்சாரதிகள் அவதானம் வேண்டும். மனச்சஞ்சலமும் தோன்றும். நிதி நிலையிலும் நெருக்கடி தோன்றும்.

சிங்கம்: உல்லாசமாகப் பொழுதைக் கழிப்பீர்கள். பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத்தேடித் தரும். வாகன முதலீடு செய்யவும் உகந்த தினம்.

கன்னி: எதிர்பாராத நன்மைகளும் இடம் பெறலாம். புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். களஸ்திரவழிப் பெருமையும் உண்டாம்:

துலாம்: சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். விவசாயிகளாயின் வீழ்ச்சிக்கிடமுண்டு.

விருச்சிகம்: அரசியல் வாதிகளுக்கு ஆதாயமுண்டு. வணிகத்துறையிலும் தொழில் தொடர்புகள் பெருகும். காதலர் வாழ்வும் மலரும்.

தனுசு: திருடர் பயத்திற்கு இடமுண்டு. கடற்றொழிலில் ஈடுபடுவோர் அவதானம் வேண்டும்.

மகரம்: குடும்பவழியால் நிம்மதி பிறக்கும் தித்திக்கும் செய்தியுடன் தேனை வாழ்வும் கிட்டும். பெரியவரின் வழிகாட்டுதல் நன்மைதரும்.

கும்பம் இல்லத்தில் தென்றல் வீசும். இலட்சியப்பாதையில் வீறுநடைபோடுவீர்கள். இருதொழில் சிறப்பும் கிட்டும். சுபதினம்

மீனம்: தானிய லாபத்திற்குமிடமுண்டு வியாபாரிகளுக்கு நன்மாற்றம் விளையும் சிலருக்கு பதவியுயர்வும் உண்டு.

திருமலை ரவீந்திரன்

## உதவி மாவட்ட ஆளுநர்

பண்டத்தரிப்பு, வெள்ளி

வட பிராந்திய லயன்ஸ் கழகங்களின் உதவி மாவட்ட ஆளுனராக டாக்டர் ரி பகீரதன் இம் மாதம் தொடக்கம் பதவியேற்றுள்ளார். சித்தன்கேணியைச் சேர்ந்தவரும் சங்கானை அரசினர் வைத்திய சாலையில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றி வருபவருமான டாக்டர். பகீரதன் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவராகவும் சேவையாற்றியுள்ளார்.

## மின் ஊழியரின் முயற்சிகள் பலனளிக்கின்றன

அராலி, வெள்ளி

வட்டுக்கோட்டை உப மின் நிலைய ஊழியர்களின் பெரு முயற்சியால் அராலிப் பகுதிகளில் சட்டவிரோத மின் பாவனைகள் தடைசெய்யப்பட்டு வருகிறன.

சட்டவிரோத மின் பாவனைகளால் ஏற்படும் அபாயங்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பதும் இவர்களின் நோக்கங்களில் ஒன்றாகும்.


## வசாவிளானில் சிலுவை ஊர்வலம்

அச்சுவேலி, வெள்ளி

தோலகட்டியில் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட தோலகட்டி செபமாலைதாஸர் ஆச்சிரமத்துறவி அருட்சகோதரர் வண. இம்மானுவேல் வென்செஸ்லாஸ் அடிகளின் கொலையைக் கண்டித்து வசாவிளான், ஒட்டகப்புலம், அச்சுவேலி மக்களால் சிலுவை ஊர்வலமொன்று நடாத்தப்படவுள்ளது.

இச் சிலுவை ஊர்வலம் இன்று பிற்பகல் 2 மணிக்கு வசாவிளான் சந்தியோகுமையோர் ஆலயத்தில் ஆரம்பமாகி சங்கானை வல்லை வீதி வழியாக அச்சுவேலியை அடைந்து அச்சுவேலி மகாவித்தியாலய ஒழுங்கை வழியாக அச்சுவேலி புனித அந்தோனியார் தேவாலயத்தைச் சென்றடையு அங்கிருந்து அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் ஊர்வலம் முடிவடையும்.

## ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. பொன். இரத்தினம்**

மண்ணிலுதித்த பொன் நாள்: 24 - 10 - 1927

விண்ணையடைந்த திரு நாள்: 17 - 07 - 1985

அருமைத் தெய்வமே
ஆருயிரே எம் ஐயா
இன்முகம் காட்டி
ஈகை பல செய்தீரே
உத்தமனாய் வாழ்ந்து
ஊர் சிறக்க வைத்தீரே
எக்கருமம் என்றாலும்
ஏணியாய் நின்றிடுவீர்
ஐயம் மறந்தறியீர்
ஒளி விளக்காய்-
குடும்பத்தில்
ஓங்கி சுடர் விட்டீர்
ஒளடதமாய் எமக்
கெல்லாம்
ஆறுதல் கூறு முன்னே
கூற்றுவன் குறுக்கிட்டு
கொடுமைபடுத்தி
விட்டான்.
தங்கள் ஆத்மா சாந்திக்கு வேண்டுகிறோம்.

தங்கள்பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பனை,
தெல்லிப்பளை.

[C 3278]

## பண்பாளர் தம்பி



நிகரற்ற கொள்கையும், நிதானமான போக்கும் நேரான பாதையும், பொது நலம் பேணும் பெருந்தன்மையும், கடவுள் பக்தியும், நாட்டுப்பற்றும் கொண்டவரான "தம்பி" என்று அன்பாக அழைக்கப்பட்ட கனவான் அமரர் சதாசிவம் தம்பிரத்தினம் இறையடி சேர்ந்து இன்று ஒரு மாதமாகிறது இவரது மறைவு நம்ப முடியாத ஒரு திடீர்ச் செய்தியாகும். இவ் விழப்பு வடமராட்சி மக்களுக்கேற்பட்ட ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

அன்னார் வளங்குறைந்தவர்களுக்கும் வசதியில்லாதவர்களுக்கும் வாரி வழங்கியதோடு சமூக, சமயப்பணிகள் யாவற்றிற்கும் கிராமிய மட்டத்திலும் பிரதேச ரீதியாகவும் முழுமையான பங்களிப்புச் செய்தவராவர். குறிப்பாக சமயத்துறையில் மிக ஆர்வமும் ஈடுபாடும் உடையவர்.

அமரர் தம்பிரத்தினம் புகையிரதப் பகுதியில் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமனம் பெற்றுப பல்வேறு மட்டங்களில் பதவியுயர்வு பெற்று இறுதியில் செலவாய்வாளராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றார். புகையிரதத் திணைக்கள இந்து ஊழியர் சங்கம், தமிழ் ஊழியர் சங்கம் போன்றவற்றில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தராகப் பணி புரிந்து கொழும்பில் நவராத்திரி பூசை, குருபூசைகள் போன்ற நிகழ்ச்சிகளை விமரிசையாகக்கொண்டாட ஏற்ற ஒழுங்குகள் செய்தார்.

அன்னார் தமக்கே உரித்தான ஆளுமையின் சிறப்பினாலும் எளிய வாழ்க்கையாலும் உயர்ந்த எண்ணங்களாலும் ஒரு தலைசிறந்த தனிமனிதனாக வாழ்ந்து காட்டிய பண்பாளர் ஆவர்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

– நவிண்டிலூர் பவன்


## Notice to the Public

All concerned are hereby informed that Mr. Kanagasabay Manikendran store keeper at Killinochchi Branch is not in the service of this company as from 7th april 1986, and has no connection whatsever with this company.

**A. BAUR & CO. Limited, Colombo.** (A-902)



## மலிவு விற்பனை வாரம்

இம்மாதம் 7ம் திகதி முதல் 12ம் திகதிவரை யாவரும் வருக

இடம்:- பிரதான களஞ்சியம்-
150, ஆஸ்பத்திரி வீதி, யா. ஐ. வி. ச.

★ பங்குதாரர் தினம் – 08-07-86.
★ நிதி வைப்பிலிட்டோர் தினம் – 09-07-86.
★ நடைமுறைக் கணக்கு வைத்திருப்போர் தினம் – 10-07-86.

முக்கிய சலுகை:

சங்கத்தில் சகாய விலையில் குறிப்பிட்ட பொருட்களை ரூபா 500/- ரொக்கத்துக்கு மேற்பட்ட தொகைக்கு வாங்குவோர் எவரும் ரூபா 1000/- பெறுமதிக்குள், எப்பொருட்களாயினும் அடக்க விலையில் (at cost) பெற்றுக்கொள்ளலாம்.

**யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்.**

(A-763)



'உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாருங்கள்"




நுரைவளம் கூடிய **சுப்ப மில்'க்வைற் சோப்**

புதிய விலை ரூ. 4-50 சதம் மட்டுமே.

2 மேலுறைகளை அனுப்பி **மில்க்வைற் செய்தி இதழ் - 127ஐ** பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்-யாழ்ப்பாணம்.**

[A-764]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

சனிக்கிழமை 5-7-86

## மூவர் கடத்தப்பட்டு கொலை

யாழ்ப்பாணம், சனி

மட்டக்களப்பில் மணப் பெண் பார்த்துவிட்டு வீடு திரும்பிச்சென்றதாயும்மகனும் பத்துவயதுச் சிறுமியும் ஊர் காவல்படையினரால் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

திருகோணமலை தொலைத் தொடர்பு திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியரான [illegible] தாஸும் (30 வய[illegible] தாயாரும் ச[illegible] கொலைசெய்யப் பட்ட[illegible] வர்.

இவர்கள் திருமலை கிளிவெட்டியைச் சேர்ந்தவர்கள. அங்கு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் இடம் பெயர்ந்து மடத்தடியிலுள்ள அகதிகள் முகாமில் இருந்து வந்தவர்கள். (மா)

## ஐரோப்பாவில்
# தமிழீழ-விரோத பிரசாரம் ஏன் எடுபடுவதில்லை?
## பிரிட்டிஷ் அறிஞர் டாக்டர் மிக் மூர் விளக்கம்

கொழும்பு, வெள்ளி

''ஐரோப்பிய நாடுகளில் இலங்கை அரசு மேற்கொண்டு வரும் பிரசார முயற்சியின் பிரதான பலஹீனம் யாதெனில் அதிதீவிர சிங்களப்பேரின வாதத்திலிருந்து அது விடுபடாமல் இருப்பதுதான் இலங்கை அரசாங்கப் பிரசாரத்தைக் காட்டிலும் பிரிட்டனிலுள்ள தமிழீழ தகவல் நிலையங்களின் பிரசார தந்திரம் காத்திரமானதாகவும் திறமையானதாகவுமிருப்பதுடன் பிரிட்டிஷ் மக்கள் மத்தியில் பரவலாக எடுபடக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக அங்கு வெளியாகும் 'தமிழ் டைம்ஸ்' பத்திரிகையை ஒரு பிரசார ஏடென்றெவரும் ஒதுக்கிவிடுவதில்லை ஏனெனில் அது நடுநிலை நின்று பிரச்னைகளை விமர்சிக்கிறது.''

சஸெக்ஸ் அபிவிருத்தி ஆய்வு நிலைய உறுப்பினர் டாக்டர் மிக் மூர் விஞ்ஞான விருத்திக்கான இலங்கைச் சங்கத்தில் 'ஐரோப்பாவில் இலங்கையின் பிரசார யுத்தம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

டாக்டர் மூர் தமது சொற்பொழிவில் மேலும் கூறியதாவது:

''இலங்கை அரசாங்கத்தின் அணுகுமுறை ஏறத்தாழத் தற்காப்பு நிலைப்பட்டதாகவுள்ளது. தகவல் தொடர்பு சாதனங்கள் 'நியாயமற்ற முறையில் பாரபட்சம் காட்டுவது' பற்றி அது குறை உறத் தொடங்கி, பி பி ஸி. சர்வதேச மன்னிப்புச்சபை, 'கார்டியன்' போன்றவற்றைக் குருட்டுத்தனமாகத் தாக்குமளவுக்கு வந்துள்ளது.

'இலங்கை அரசுக்கு எதிராக பி.பி. ஸியோ அல்லது 'கார்டியன்'னோ சதிசெய்கின்றன' என்ற குற்றச்சாட்டு நம்பக்கூடியதாக இல்லை. சர்வதேச மன்னிப்புச் சபையைப் பொறுத்தளவில், நாடுகளின் அரசாங்கங்கள் மனித உரிமைகளை மீறுவது பற்றியே அது அக்கறை கொண்டுள்ளது. தனிப்பட்ட குழுக்களின் நடவடிக்கைகளில் அதற்கு ஆர்வம் இல்லை. அண்மையில் ஒரு இலங்கை அதிகாரி 'உலகில் தென்னாபிரிக்காவிலுள்ள வெள்ளையரைக் காட்டிலும் அதிக சலுகைகளை அனுபவிப்பவர்கள் இலங்கைத் தமிழர்களே' எனக் கூறியிருப்பது மிகத் தவறானதாகும்.

•1977-1983 காலப் பகுதியில் நடைபெற்ற பல சம்பவங்கள், 1980-ல் வேலைநிறுத்தஞ் செய்த தொழிற் சங்க உறுப்பினர்கள் மீதும் புத்தபிக்குகள் மீதும் வன்செயற் பிரயோகம், 1981-ல் யாழ்ப்பாண அபிவிருத்திச்சபைத் தேர்தலில் நடைபெற்ற ஊழல், 1982-ல் நடைபெற்ற 'மக்கள் தீர்ப்பி'னை வெல்ல அரசு அதிகார துஷ்பிரயோகம், எதிர்க்கட்சி அரசியல் தலைவர்களைக் காரணமின்றிக் கைது செய்தமை, நீதித்துறை அலுவலர்கள் மீதான நிர்ப்பந்தம் முதலான சம்பவங்களை அறிந்த நிலையில் பிரிட்டிஷ் மக்கள் 'நெருப்பில்லாமல் புகையாது' என்ற ரீதியில் சிந்திப்பது இயல்பானதே.' [ஷ]

## வாசுதேவா சென்னை விஜயம்

கொழும்பு வெள்ளி

தமிழ்தீவிரவாதத் தலைவர்களை சந்திப்பதற்காக நவசமசமாஜக் கட்சித்தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார நாளை ஞாயிற்றுக் கிழமை சென்னை செல்கிறார். (சிவ)

## ஜெகஜீவன்ராம் நிலை கவலைக்கிடம்

புதுடில்லி, ஜூலை 4

முன்னாள் இந்தியத் துணைப் பிரதமர் திரு ஜெகஜீவன்ராம் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாயுள்ளது.

ஓராண்டு காலமாக இவர் உடல் நலம்குன்றியிருந்தார். அத்துடன் கடந்த மூன்று நாட்களுக்கு முன் மூச்சுத் திணறல் ஏற்பட்டு நுரையீரல் வீங்கியிருப்பதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன,

தற்போது இவரது உயிரைத் தப்ப வைப்பதற்காக டாக்டர்கள் தீவிர முயற்சியிலீடுபட்டுள்ளார்கள். [பி]

## மூடப்பட்ட முருகன் கோவிலில்
# வெள்ளி தோறும் பூசைகள் நடத்த அனுமதி

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறையில் பொலிஸ் கமாண்டோபிரிவு உருவாக்கப்பட்டபோது மூடப்பட்ட முருகன் ஆலயத்தில் மீண்டும் வெள்ளிக்கிழமை தோறும் பூசைகள் நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பழைய ஆஸ்பத்திரிக் கட்டிடத்துக்கு பொலிஸ் கமாண்டோ பிரிவு கடந்த 6 மாதத்துக்கு முன் உருவாக்கப்பட்டபோது அப் பகுதியில் இயங்கிய சுகாதார அதிகாரி காரியாலயமும், மருத்துவ நிலையமும் வேறுஇடங்களுக்கு மாற்றம் செய்யப் பட்டதுடன் அப்பகுதியில் இருந்த முருகன் ஆலயமும் பூசைகள் இன்றி மூடப்பட்டிருந்தது.

இதையடுத்து இப்பகுதி பொதுமக்கள் எடுத்த முயற்சியின் பலனாக மேற்படி ஆலயத்தில் பிரதி வெள்ளிக் கிழமைகளில் பூசைகள் நடக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதையடுத்து ஆலயம் திறக்கப்பட்டு சண்டாலப்பிராச்சித்தம் செய்யப்பட்டு விசேட பூசைகள் இடம் பெற்றன.

மேற்படி பூசையில் பொலிஸ் கமாண்டோ பிரிவு உதவி பொலிஸ் அதிடர் திரு. பிலப் பிட்டியா, பாதுகாப்புபடை தளபதி கப்டன் டபிள்யூ. பி. கே. விஜயசிங்கா உட்பட பொதுமக்களும் படைவீரர்களும் கலந்து கொண்டனர்.

## கடல் போரில் பலியான 19 போராளிகளுக்கு புளட் அஞ்சலி

யாழ்ப்பாணம், சனி

மன்னார் கடல் பகுதியில் கடற்படையினருக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக (புளட்) போராளிகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதலில் 10 போராளிகள் மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 29-ம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப்' போராளிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் வீரமரணம் அடைந்த 10 தோழர்களுக்கும் எமது வீர அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் இதே படகில் வீரமரணமடைந்த 'தமிழீழ விடுதலை இராணுவ' (ரெலா) தோழர்கள் 9 பேருக்கும் எமது வீரஅஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத் தோழர்களின் விபரம் வருமாறு:

அகமட், நயினார் ராஜேந்திரன்: [கற்பிட்டி], நடராஜா, தவராஜா, [ரஜீத்] பத்தளம்], வேலுப்பிள்ளை. செல்லத்துரை, [சிறீதர்] ஓமந்தை சூசைப்பிள்ளை. அந்தோனிப்பிள்ளை-தோமஸ்ராஜா தொம்சன் நானுட்டான், செபமாலை - செடஸ்தியாம்பிள்ளை ஆனந்த சற்குணம் [ஜஸ்டின்] அடம்பன், அப்பாத்துரை-பணிவாசகர் [கரன்] சுழிபுரம், வைரமுத்து-கைலகாந்தன் [சாஜகான்] சுழிபுரம் பரமகுரு-தனசேகரகுரு [செல்வம், சுமன்] சுழிபுரம் தங்கக் கணபதி-ரவீந்திரன் [தர்சன்] சுழிபுரம்.

## இன்று

யாழ்ப்பாணம், சனி.

தீவுப்பகுதி எழுத்தாளர் சங்கத்தின் கருத்தரங்கொன்று இன்று சனிக்கிழமை பிற்பகல் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் கவிஞர் தி. தில்லைச்சிவன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

## மானிப்பாய் மெமோறியல் 150-வது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், சனி

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 150-வது ஆண்டு நிறைவு விழாவும், ஸ்தாபகர் தினமும் இன்று நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம அதிதிகளாக யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம், தென்னிந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்ச ஆதீன முதல்வர் பேராயர் அருட் திரு ஜே. டி. அம்பலவாணர் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை பிரதம கணக்காளர் திரு. க. ம. இராசேந்திரம், யாழ். தேசிய சேமிப்பு வங்கி உதவி முகாமையாளர் திரு க. கமலசேகரம், மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். [பண் நிரு.]

## அகதிமுகாம் மூடப்பட்டது

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சியில் உருவான நிலைமைகளைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட உருத்திரபுரம் மகாவித்தியாலய அகதிமுகாம் மூடப்பட்டுவிட்டது. இங்கு தங்கியிருந்த அகதிகள் வேறு இடங்களுக்கு சென்றுவிட்டனர்.

இதே வேளை அகதிமுகாமாக இருந்துவந்த உருத்திரபுரம் மகாவித்தியாலயம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

## காடுகளை அழிக்கத்தடை

முல்லைததீவு, வெள்ளி

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் காடுகளை கண்டபடி அழிக்கக்கூடாதெனவும் காடுகளில் மரம், விறகு வெட்டுவதானால், இணக்கசபைகளின் அனுமதியைப் பெறவேண்டும் எனவும் கோரி துண்டுப் பிரசுரம் ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ளது.

## தண்டனை

மட்டக்களப்பு வெள்ளி

போராளிகளைக் காட்டிக் கொடுத்த ஒருவர் சமூகவிரோதியாகக் கணிக்கப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளால் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தம்பட்டை என்னும் கிராமத்தைச் சேர்ந்த குமாரசாமி தங்கராசா [28 வயது] என்பவரே துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

கல்குடாத்தொகுதியிலுள்ள களுவாங்கேணிச் சந்தியில் இவரது சடலம்காணப்பட்டது. [மா]

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

ஆனைக்கோட்டை அருள்மிகு நாரவராக்காடு பிள்ளையார் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (வா)

## குழாய்நீர் விநியோக ஆரம்பவிழா

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் ஜமுனுபகுதி குழாய் நீர் விநியோக ஆரம்பவிழா இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.

நல்லூர் சட்டநாதர் ஆலயப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள குழாய்நீர் விநியோகத்துக்கான நீர்த்தாங்கியை யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு சி. வீ. கே சிவஞானம் திறந்து வைப்பார், (மா)

## மரண அறிவித்தல்

டாக்டர் ஜெயராசசிங்கம் (சுழிபுரம்)
03-07-86ல் இலண்டனில் காலமானர்

இவர் காலம்சென்ற மலேயன்பென்சனர் இராமசாமி சின்னத்தங்கம் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும் சிவயோகவதியாரின் அன்புக்கணவரும், கேசவராஜ், ரூபராஜ் ஆகியோரின் அருமைத்தந்தையும், திருமதி நாகேஸ்வரி ரகுநாதன், ஈஸ்வரநேசன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் மலேயன்பென்சனர் கந்தையா செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், டாக்டர் ரகுநாதன், சிவதாஸன், சிவநேசன், மனோகரன், வீமதேவன், திருமதி சிவஞானவதியார் ஏரம்பமூர்த்தி, திருமதி நீலாதேவி இராசரத்தினம், திருமதி சாந்தாதேவி நாகராசா, திருமதி பூமாதேவி ஈஸ்வரநேசன் ஆகியோரின் மைத்துனரும் கொழும்பு சுங்க இலாகா S. இராசசிங்கம் அவர்களின் பெருமகனும் திருமதி அமிர்தவல்லி சுப்பிரமணியத்தின் மருமகனும், செல்வசந்திரன், சிவசுதா, சிவந்தா ஆகியோரின் மாமனும், சிவகலாவின் பெரியதகப்பனுருமாவார். இவர் யாழ்ப்பாணம், பதுளை, நாவலப்பிட்டி, அரசினர் வைத்தியசாலையிலும் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையிலும் கடமையாற்றி தற்போது இலண்டனில் சேவையாற்றும்போது காலமானர்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். C 3309

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூலை மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49. Telegram, Eelanadu, Telephone 22389. 84126